I.D. 5/2022
20-12-2023

W.W.1 அன்புமணி
<u>குறுக்கு விசாரணை : ஒன்றாவது எதிர்மனுதாரர் தரப்பு</u>

நீங்கள் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி என்றால் சரி. ஒன்றாவது எதிர்மனுதாரர் கழகம் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பயனுக்கா செயல்பட்டு வருகிறது என்றால் சரி. ஒன்றாவது எதிர்மனுதாரர் தமிழ்நாட்டில் எந்த எந்த இடத்தில் யார் யாருக்கு பாதுகாப்பு பணிக்கு ஆட்கள் தேவையோ அந்த அந்த இடத்திற்கு ஓய்வு பெற்ற உங்களை போன்ற இராணுவ அதிகாரிகளை வேலைக்கு அனுமதிப்பார்கள் என்றால் சரி. நீங்கள் எந்த வருடம் முதல் ஒன்றாவது எதிர்மனுதாரர் கழகத்தில் வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் 01.04.2002-ல் இருந்து வேலை பார்த்து வருகிறேன். நீங்கள் 2002-ல் இருந்து மாத சந்தா செலுத்துகிறீர்களா என்றால் ஆமாம். அதற்கான ஆவண ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவர் தரப்பு ஆவணங்களை சாட்சியிடம் காண்பித்து கேட்க சாட்சி அதை பார்த்து அந்த ஆவணம் இல்லை என்று சொன்னார். நீங்கள் கூறியபடி ஒன்றாவது எதிர்மனுதாரருக்கு மாத மாதம் சந்தா கட்டும் நடைமுறை கிடையாது நீங்கள் சந்தா கட்டியதும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஒன்றாவது எதிர்மனுதாரர் மூலம் எப்போது பணியில் அமர்த்தப்படுகிறீர்களோ அப்போது இருந்து தான் நீங்கள் சந்தா செலுத்துகிறீர்கள் என்றால் சரி. பணியில் இல்லாத காலத்தில் நீங்கள் சந்தா கட்டவேண்டியதில்லை என்றால் சரி. ஒன்றாவது எதிர்மனுதாரர் தமிழ் நாட்டில் எந்த எந்த இடத்தில் பணிக்கு ஆள் தேவை என்று விளம்பரம் கொடுப்பார்கள் அதன் படி தான் நீங்கள் பணிக்கு மனு செய்து சேர்ந்தீர்கள் என்றால் சரியல்ல, அவர்களாகவே அவர்களிடம் பட்டியலில் இருக்கும் என்பெயருக்கு தபால் அனுப்பினார்கள். எந்த வருடம் அது போன்று உங்களுக்கு தபால் அனுப்பினார்கள் என்றால் 28.03.2002- ம் தேதி அனுப்பினார்கள். நீங்கள் 2002-ல் இருந்து 2020 -வரை எத்தனை இடங்களில் வேலை பார்த்தீர்கள் என்றால் 5 இடங்களில் வேலை பார்த்தேன். 2002-ல் இருந்து 2020 -வரை நீங்கள் இதுவரை வேலை வேண்டி மனு செய்ததே கிடையாதா என்றால்

செய்தது இல்லை. 2020-க்கு பின்னிட்டு வேலை வேண்டும் என்று மனு கொடுத்திருக்கிறீர்களா என்றால் கொடுத்துள்ளேன் காத்திருப்போர் பட்டியலில் வைத்துள்ளார்கள். நீங்கள் ஒவ்வொரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறும் போதும் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கும் உங்களுக்கும் ஒரு ஒப்பந்தம் போட்டுருக்கிறீர்கள் என்றால் இல்லை எனக்கு பணி நியமன உத்தரவு தான் வரும் . நீங்கள் வேலை பார்த்த 5 இடங்களிலும் அவ்வாறு தான் வேலைக்கு சேர்ந்தீர்களா என்றால் ஆமாம். நீங்கள் வேலைக்கு சேர்வதற்கு கொடுத்ததாக கூறப்படும் கடிதம் உங்கள் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் முதல் முறை வேலைக்கு வந்த கடிதத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதன்பின்னிட்டு கொடுத்த கடிதங்களை நிர்வாகத்திடமே திருப்பி கொடுத்துவிடவோம். நீங்கள் கூறுவது போல் வேலைக்கு சேர சொல்லி அனுப்பிய கடிதங்களை நிர்வாகமே பெற்றுக் கொள்ளும் வழக்கம் இல்லை நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. ஒன்றாவது எதிர்மனுதாரர் வேலைக்கு ஆட்கள் வேண்டும் என்றால் நாளிதழில் விளம்பரம் செய்து தற்போது Online -லும்விளம்பரம் செய்து அதற்கு மனு செய்பவர்களே மூப்புநிலை பொருத்து பணிவழங்கும் வழக்கம் தான் உள்ளது என்றால் சரியல்ல என்னுடைய காலகட்டத்தில் அவ்வாறு இல்லை. நீங்கள் கடைசியாக வேலை பார்த்தது இரண்டாவது எதிர்மனுதாரர் கூட்டுறவு பால் ஒன்றித்தில் வேலை பார்த்துள்ளீர்கள் என்றால் சரி. 02.02.2020-ம் தேதி நீங்கள் வேலை பார்த்த போது உங்களுக்கும் அங்கு வேலை பார்த்த கருப்பன் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரருக்கு அதனால் பணியில் இடையூறு ஏற்பட்டதால் உங்களுக்கு பதிலாக வேறு ஒருவரை பணிக்கு அமர்த்திவிட்டார்கள் என்றால் என்னால் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை வேறு ஆள் பேட்டுவிட்டார்கள். உங்களை பணியில் இருந்து நீக்கவில்லை உங்களுக்கு பதிலாக வேறு ஒருவரை பணியில் வைத்திருந்தார்கள் உங்களை காத்திருப்போர் பட்டியலில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் ஒன்றாவது எதிர்மனுதாரரின் நிரந்தர பணியாளர் கிடையாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எப்போது எல்லாம் வேலை உள்ளதோ அந்த சமயத்தில் மனுவின் பேரில் வேலை கொடுப்பார்கள் என்றால்

Aovea

சரியல்ல, நான் 15 வருடங்களாக தொடர்ந்து வேலையில் இருந்துள்ளேன். 15 வருடங்களாக தொடர்ந்து நீங்கள் ஒரே இடத்தில் வேலை பார்க்கவில்லை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலை பார்த்தீர்கள் ஆஜகயால் நீங்கள் ஒப்பந்தத் தொழிலாளி என்றால் சரியல்ல. நீங்கள் மேற்கூறிய 5 நிறுவனங்களும் வெவ்வேறான நிறுவனம் என்றால் சரி. 25.02.2021-ம் தேதி தமிழ்நாடு சட்ட பல்கலைகழகத்தில் பாதுகாவலர் வேலைக்கு மனு செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 11.02.2021-ம் தேதி TNEB துறை மங்கலம், பெரம்பலூர்-க்கு மனு செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். அதில் நீங்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறீர்கள் ஆகையால் உங்களுக்கு பணி கிடைக்கவில்லை என்றால் சரி. உங்களுக்கும் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தில் நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உங்களால் எதாவது பிரச்சனை ஏற்பட்டால் அதன் காரணமாக உங்களுக்கு எந்த வித அறிவிப்பும் வழங்காமல் உங்களுடனான ஒப்பந்தத்தை முறிவு செய்வதற்கு சரத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் அதிக பணி நேரம் பார்த்தற்கான பணப்பயன் பெற்றீர்களா என்றால் கொடுத்தார்கள் ஆனால் அதை மார்ச் -2017-ல் அந்த தொகையான ரூ.2100/- பிடித்துக்கொண்டார்கள். ரூ.2100/- பிடித்தம் செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தனிப்பட்ட ஆவணம் கிடையாது என்னுடைய Pass Book-ல் தான் பொதுவாக பெறும் சம்பளத்தில் இருந்து குறைந்துள்ளது. நீங்கள் மார்ச் 2017-ல் 26 நாட்கள் வேலை பார்த்தீர்கள் அந்த நாட்களுக்கு தான் ஏப்ரல் மாதத்தில் சம்பளம் போட்டுள்ளார்கள் என்றால் நான் மார்ச் 31- வரை தொடர்ந்து வேலை பார்த்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் எவ்வித சம்பள பாக்கியும் உங்களுக்கு கொடுக்க வேண்டியது கிடையாது என்றால் சரியல்ல. உங்களுக்கு தற்போது 60 வயது முடிந்துவிட்டது என்றால் சரி. நீங்கள் கோரியுள்ளபடி வேறு எந்த பணப்பலன்களும் உங்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை, PF பணம் மட்டும் தான் உங்களுக்கு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. உங்களுக்கு தற்போது 60 வயது பூர்த்திஅடைந்து விட்டதால் நீங்கள் கோரியுள்ள மீண்டும் வேலை வேண்டும் என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒன்றாவது எதிர்மனுதாரரிடம் ஒப்பந்த அடிப்படையில் தான் நீங்கள் வேலை

Ape

பார்த்து வந்தீர்கள் ஆகையால் PF தொகை ஒன்று தான் உங்களுக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

(இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**

Web Copy